ஞாயிறு வெளியீடு

ஆண்டுச் சந்தா ரூபா 5 [illegible]
தனிப் பிரதி 0—1—0 [illegible] 8 கா

Jaina? Debating Society
G. T. MADRAS.

REGD. No. M. 4642

# திராவிடநாடு

மலர் 5 | காஞ்சிபுரம் 16—6—46 | இதழ் 8

## தெய்வவிடுதி திறக்கப்படுவதுபோல் மனிதவீடும் திறக்கட்டும்

—[கைவல்யம்]—

நமது நாட்டைவிட்டு ஆங்கிலேயர்களைப்போகச்சொல்லியாய் விட்டது. அவர்களும் போவதாகச் சொல்லுகிறார்கள். ஆங்கிலேயர்கள் போய்விட்டால் ஆதித்திராவிடர்களில் சிலருக்குக் கஷ்டம். அதைக் கவனிக்கும் பொறுப்பு நமக்கிருக்கிறது. இராச்சியப் பொறுப்புகள் நமக்கு வந்துவிட்டன. இனிமேல் ஆங்கிலேய உத்தியோகஸ்தர்கள் குறைவார்கள். மற்றத்துறைகளிலும் குறைவுபடும். அதுபல தாழ்த்தப்பட்டவர்களின் தொழிலைப்பாதிக்கும். இப்பொழுது ஒருசிலரேனும் சிறிது பசியாரஉண்டுஉடுத்தி, உலக அறிவைத்தெரிந்து, தங்கள் குறைபாடுகளைஉணர்ந்துஅவற்றை அடையும் வழியை நாடுகிறார்கள். ஆங்கிலேயர்கள் போய்விட்டால் அவர்கள்பாடு கஷ்டந்தான். இதனால் நான் வெள்ளைக்காரர்களைஇங்கேயே இருக்கச்சொல்லவில்லை. ஆங்கிலேயரின் இடத்திற்கு வந்துவிட்ட நாம் ஆதித்திராவிடர்களின் குறைகளையும் போக்க வேண்டுமென்றே சொல்லுகிறேன்.

நமது நாட்டில் ஒரு ஆங்கிலேய உத்தியோகஸ்தனுக்கு பட்லர், குசினிமேட்டி, லஸ்கர், பாய், தண்ணீர்காரன், நாய் ஆள், தோட்டக்காரன் ஆயாள்போன்ற பலபேர் வேண்டும். இதற்குமேலும் சில வேலையாட்களை வைத்துக் கொள்ளுகின்றனர். ஆங்கிலேயர்கள்போய்விட்டால்அவர்கள் இடத்திற்குவரும் நம்மவர்கள் அந்தஆட்களை வைத்துக்கொள்ளமாட்டார்கள். அவர்களுக்குத்தேவையில்லாததுமட்டுமல்ல, அவர்கள் தீண்டப்படாதவர்கள். ஆபீஸ் சேவகன் வேலைகூட அவர்களுக்குத்தரமாட்டார்கள். ஆபீஸ்சேவகன் தீண்டப்படாதவனாக இருந்தால் வீட்டு வேலைக்கு உபயோகப்படமாட்டானல்லவா? தொட்டுஎடுக்கக்கொடுக்கக்கூடாது. அவர்களைத் திண்ணையில்கூட ஏறவிடமாட்டார்கள். சீமைக்குப்போவார்கள்; எல்லாம் தின்னவும் குடிக்கவும் பழகுவார்கள், எல்லோரும்கூடி டின்னர் சாப்பிடுவார்கள், டீபார்ட்டிக்குச் செல்வார்கள். அதை நடத்துகிறவர்களெல்லாம் தீண்டப்படாதவர்களென்பது அவர்களுக்குத்தெரியும். என்றாலும் வெளி வேலைக்குக்கூட ஆதித்திராவிடர்களை வைத்துக்கொள்ளமாட்டார்கள். ஏன் வைத்துக்கொள்ளக்கூடாது? அதிலென்னகுற்றம்? தீண்டாமை எனக்குக் கிடையாது என்று பேசுவார்கள். ஐ. சி. எஸ். கூட அப்படியேசொல்லுவார். பெண்சாதியின்பந்துக்கள் போக்கு வரவு அவசியமாயிருப்பதால் அவர்கள் ஆக்ஷேபணையும், அருவருப்பும், அந்த வார்த்தையைக்கூட அடக்கிவிடும். ஒரு ஆங்கிலேயன்நம் ஊரைவிட்டுப்போனால் ஏழெட்டு ஆதித்திராவிடக் குடும்பங்களுக்குச் சீவனமில்லை. ஆயிரக்கணக்கான ஆதித்திராவிடர் குடும்பங்களை ஊரில் ஒதுக்கி, வேலையில் அடக்கிப் பசியால்மடியவைத்துக்கொண்டிருக்கும் ஜமீன், மிட்டா, மிராசு, பண்ணை, மில்முதலாளிகளுக்கெல்லாம்தோன்றாத கருணையும் இரக்கமும், ஆங்கிலேய உத்தியோகஸ்தர்கள் போய்விட்டால் அந்தஏழெட்டுஆதித்திராவிடகுடும்பங்கள்மேல் தோன்றவாபோகிறது. பெரியஉத்தியோகஸ்தர்களுக்குக், கிராமங்களில் ஆதித்திராவிடர்கள் பட்டினியால் கஷ்டப்படுவதில் கவலை என்ன? அவர்களுக்கும் நமக்கும் உத்தியோகத்தில் வித்தியாசமே ஒழிய புத்தியும் பழக்கமும் ஒன்றுதானே? பெரிய உத்தியோகஸ்தர்கள் கிராமங்களுக்கு வருவதாயிருந்தால் மணியகாரர் தண்டக்காரனிடம் பறையனைக் கூப்பிட்டு ஊரைக்கூட்டச்சொல்லி உத்தரவு போடுகிறான். கூட்டினதற்குக்கூலி உண்டா? இல்லை. மாலைவரை வேலை செய்தும் சோறுஉண்டா? இல்லை. மாமிசம்தின்கிறஉத்தியோகஸ்தனானால் பறைச்சேரியில் கோழிபிடித்துவரச்சொல்லித் தண்டக்காரனிடம்உத்தரவுபோடுவான். இந்தச் செய்கைகள் பலகாலமாகவே நடந்து வருகின்றன. இவைகளுக்கெல்லாம் காரணம் நமக்குப் பல சமயங்களும் சாமிகளும் அமைந்திருப்பதேயாகும். நமது சமயங்கள் ஆதித்திராவிடர்களைச் சேர்த்தால் நாம் அழிந்து போவோம் என்கின்றன. சாமிகளும் அவர்களைச்சேர்த்தால் நாம் செத்துப்போவோம் என்கின்றன. சமயங்களோசனசமூகத்தை ஒன்று சேர்த்து ஒழுக்கப்படி உலகத்தில் வாழவைப்பதென்கிறார்கள். சாமியோ எல்லாரையும் காப்பாற்றுவது என்கிறார்கள். நமது சமயத்திற்கும் சாமிக்கும் அந்த இரண்டு குணங்களுமில்லை. மற்றச் சமயங்களும் சாமிகளும் எந்தச் சனங்கள் தன்னிடம் வந்தாலும் தள்ளுவதில்லை, அழிவதில்லை, சாவதுமில்லை. நம்முடைய சமயத்திற்கும் சாமிக்கும் இந்த அபூர்வ குணம் எங்கிருந்து வந்ததோ? நமது தெய்வங்கள் தெய்வலோகத்திலேயே இருந்திருந்தால் இந்தப்புத்திகளெல்லாம் இருக்காது. அவதாரஞ்செய்து பூலோகத்துக்குவந்ததனால் பொது நியாயங்களையெல்லாம் விட்டுவிட்டது. நம்சமயத்திற்கோ இப்பொழுது அவசியம் வேண்டுவது தெரிவதில்லை. தெய்வத்திற்கோ தேகம், மனம், இந்திரியங்களில்லை. இவைகளுக்கெல்லாம் குத்து, வெட்டுகளின் உபத்திரவம் தெரியாது. பக்தன், ஆச்சாரி, குரு, புரோகிதன் எல்லாம் ஓடி ஒளிந்துகொள்ளுவான். எட்டிலும், கல்லிலும், செம்பிலுமா நாம் உண்டாக்கப்பட்டிருக்கிறோம்? அடியும்குத்தும்நம்மை உபத்திரவப்படுத்தாமலிருக்க. யாரையும், எச்சமயத்திலும் தம்முடன் சேர்த்துக்கொள்ள அன்னிய மதங்களும் அதன் தெய்வங்களும் காத்துக்கொண்டிருக்கின்றன. வேலையில்லாதவர்களும், நம்மால் தள்ளப்பட்டவர்களும் நம்மைவிட்டுப்போய் பின்வந்து மரிக்கையில் நாம் என்ன செய்வது என்றநிலைக் கையில்தான் எனக்கு இந்தயேன் [illegible] எழுத்தோன்றுகிறது.

தீண்டாமையைப்போக்கவேண்டும், விட்டுவிடவேண்டும் என்பதுதான் காங்கிரசின்முதற்கொள்கை. இப்பொழுது காங்கிரசில் அதிகாரம் வகிப்பவர்களும், மெம்பர்களும் செல்வாக்கு உடையவர்களும் தங்கள் வீட்டு வெளிவேலைக்காவது தீண்டப்படாதவர் என்போரை வேலைக்கமர்த்திக் கொண்டால் அதைப்பார்த்து மற்றும் சிலரேனும் பின்பற்றுவார்கள். அப்பொழுது தீண்டாமை போக ஒரு வழி உண்டாகும். தீண்டாமைப் பேச்சின் அழகும் பிரகாசிக்கும், முன்பு ஜில்லாபோர்டு, முனிசிப்பாலிட்டிகளைக் காங்கிரஸ் கைப்பற்றியது. அப்பொழுது அவைகளில் ஆதித்திராவிடருக்குச் சேவகன்வேலைகூடக் கொடுக்கவில்லை. நியாயம், நீதி, உண்மை, உணர்ச்சி முதலியகுணங்கள் வாயிலிருப்பது போலவே மனதிலும் இருக்க வேண்டியவைகளாகும்.

கோவிலைத்திறந்து விடுவது தீண்டாமையைப் போக்க ஒரு வழி என்று கோவில்களைத் திறந்துவிடச் சொல்கிறார்கள். சில இடங்களில் திறக்கவும் செய்தார்கள். கோவில் என்பது தெய்வத்தின்வீடு. முன் திறவாமலிருந்ததற்கும் இப்பொழுது திறந்ததற்கும் அத்தெய்வம் ஒன்றும் பேசவில்லை. பேசும் தெய்வங்களான நம் பெரியவர்களின் வீடுகளும் திறக்கப்பட்டால் தான் தீண்டாமை அதிசீக்கிரம் அழிந்து படும். தீண்டப்படாதவன் சமைம்பதைச் சாப்பிடுகிறோம், அவன்கலப்பிய விதவிதமான பானங்களைப் பருகுகிறோம், தொன்றுதொட்டுவரும் பழக்கம் கூட அதிகரிக்கிறது. அவைகளிலெல்லாம் தீண்டாமையிருப்பதில்லை, கண்டுபிடிக்கவும் இல்லை. கேக்கு, பன், ரொட்டி, பிஸ்கட் மற்றும்பல இனிப்புப் பொருள்களை வீட்டிலும் வழங்குகிறோம். மனைவி மக்கள் யாவரும் சாப்பிடுகிறார்கள். நாக்கிலோ, தொண்டையிலோ, வயிற்றிலோ இரத்தத்தில் கலப்பதிலோ, மனதிலோ கூடத் தீண்டாமை தட்டுப்படுவதில்லை. தொந்தரவுகொடுப்பதுமில்லை. இந்த அனுபவங்களினாலே பெரியவர்களின்வெளிவீட்டுவேலைகளில்தீண்டாமை ஒன்றும் செய்து விடாது. இதைத் தெரிந்துகொள்ள இப்பொழுது படித்த பி.ஏ. எம்.ஏ. மேதாவும், இருக்கிற ஆங்கிலேய மூக்குக்கண்ணாடியும்போதும். பௌதிகசாஸ்திரத்திலும் பெரிய பரீட்சைகள்தேறி இராச்சிய நிர்வாகப்பொறுப்பிலும் அமர்ந்திருக்கும் நமது சாதாரண [illegible] கோழைகளாகி பிறர் உத்தரவுக்குக்காத்திருப்பதாகிய வழக்கத்தை நம்மால் விடமுடியவில்லையென்றால்; நாளை எல்லைக்காவலும் குத்துப்பாக்கிதூக்கிக்காவலுக்குப் போகையில்தீண்டாமையைஎங்கே விட்டுப்போவது? எல்லைகளில் எல்லாம்பிராமணஓட்டல்கள்கட்டி அங்கே தீண்டாமையை விட்டு வைப்பது சாத்தியமா? தீண்டாமையை எதிரிடம் விட்டுவிடலாமா? விட்டு விட்டால் நம்வீட்டு வெளிவேலையில் தீண்டாமையை வைக்க அஞ்சும் நமது நடுவீட்டுக்குள்ளே தீண்டாமை தானேவந்து புகுந்துகொள்ளுமே! ஆகவேபெரியவர்களால் புழைப்பதுவதாகிய விடுதலை எல்லோருக்கும் கொடுங்கள். கொடுக்காமல் மாறுவீத்தை இனியும் அவமானப்படுத்தி வந்தால் அடி, குத்துக்களிலிருந்து தப்பமுடியாது, நம்முடைய தெய்வங்களும் சாஸ்திரங்களும் அவைகளிலிருந்துநம்மைக்காப்பாற்றாது. இந்த அனுபவத்திற்குச் சாட்சியே தேவையில்லை.

சாதிஇந்துக்களின் மனமாற்றத்தால்தீண்டாமை போகுமேயொழிய, வேறுசட்ட திட்டத்தால் போகாதென்கிறார்கள். எதுவும் கூடுவதும், குறைவதும் மனமாற்றத்தால் தான். மனமாற்றம் அடைவதெப்படி? மாடும் மானும் புலியின் மனமாற்றத்தை எதிர்பார்த்துக் கொண்டுதானிருக்கின்றன. பூனையிடம் எலியும்அப்படியே. இவைகள் இயற்கையிலே நல்லவாயிருந்தால்தான், பிராமணனும் சண்டாளனும் இயற்கையிலேயே நல்வா[illegible]

(5-ம் பக்கம் பார்க்க)

சென்ற வாரத் தொடர்ச்சி:

# ★ ரங்கோன் ராதா! ★

சௌமியன்.

'ஓர் இரவு இன்பமாக இருந்தேன், மறுதினம் காலைமுழுவதும், என் வாழ்வு மறுபடியும் மலர்கிறதுஎன் றெண்ணி மகிழ்ந்தேன், மாலையிலே மறுபடியும் என்னைப் பேய்பிடித்துக்கொண்டது, என்று சொன்னேனல்லவா. நடந்தது என்ன தெரியுமா மகனே! என் வாழ்வை நாசமாக்கவே எனக்குத் தங்கையாகப்பிறந்தாளே, அந்தத்தங்கம்; அவள் காதுக்கு எப்படியோ எட்டிவிட்டது, நானும் உன் அப்பாவும் சமாதானமாகப் போய் விட்ட விஷயம். எனக்குப் பேய் நீங்கி விட்டதென்றும் பழையபடி புருஷனுடன், சந்தோஷமாகவே இருப்பதாகவும்,யார்மூலமாகவோ கேள்விப்பட்டாள், உடனே அவள் பேயை என்மீது ஏவிவிட்டாள். உன் அப்பாவேதான், பேயாகவந்தார். வரும்போதே, என்தலையிரைப்பிடித்து இழுத்து முதுகில் அறைந்து, என்னைக் கொடுமைக்கு ஆளாக்கினர்.

காலையிலே கடைக்குப் போனவர், தங்கத்தைப்பார்த்து விட்டுவர, அங்கே சென்றிருந்தார். அவள் அவருக்கு என்னகலகம் செய்தாளோ எனக்குத் தெரியாது ஒருவாறு யூகித்துக் கொள்ளத்தான் முடிந்தது. மாலையில் வீட்டுக்குள் நுழைந்தபோதே, அதிக கோபத்தோடு காணப்பட்டார். சங்கடமெல்லாம் தீர்ந்து விட்டது என்று எண்ணியிருந்த எனக்கு, உன் அப்பா அவ்வளவு கோபமாக உள்ளே வந்தபோது, கொஞ்சம் பயமாகவே இருந்தது.

"என்னங்க, ஒரு மாதிரியாக இருக்கிறிங்க" என்று நான் வாஞ்சையுடன் கேட்டேன். என்னைச் சுட்டுவிடுவதுபோல முறைத்தார். "என்ன கோபம்!" என்று கேட்டுக்கொண்டே, அவருடைய கரத்தைப்பிடித்தேன், உதறித்தள்ளிவிட்டு, "அந்தத்தளுக்குக் குலுக்கு இங்கே வேண்டாம்" என்றார். எனக்கு, அழுகை வந்துவிட்டது. "நீலி!" என்றார்; நான் நேரே சமயற்கட்டு சென்று, அவருக்கு இலை போட்டு விட்டு, வந்து, சாப்பிடக் கூப்பிட்டேன், "இனிஉன்கையால் சோறு போட்டு நான் சாப்பிடுவேன் என்று நினைக்கிறாய். கள்ளி! நான் என்ன மானங்கெட்டவனா?" என்று ஆத்திரத்தோடு கூறினார். எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை, மரம்போல் நின்றேன்.

"பேய் பிடித்துக்கொண்டால் என்னடி? ஊரிலே, பேய் எவ்வளவோ பேருக்குப் பிடிக்கிறது. பிடித்தால், உன்னைப் போலவா கெட்டார்கள் அவர்களெல்லாம்" என்றார். "என்னென்னமோ பேசுகிறீர்களே, எனக்கு விளங்கவில்லையே, நான் என்ன கெட்டுவிட்டேன்"என்று கேட்டுக்கொண்டே அழுதேன். "வாயைமூடடி விபசாரி!" என்றார். ஆயிரம்தேள் ஏககாலத்திலே கொட்டியதுபோலாகி விட்டது எனக்கு அந்தப்பேச்சு கேட்டதும். விபசாரி! நான் விபசாரி! அவர் வாயால் அவ்விதம் கூறக் கேட்டேன். பழிபாவமறியாத என்னை, திக்கற்ற என்னை, விபசாரி, என்று கூறினார்.

"தெய்வமே! இது என்ன பேச்சு" என்று அலறிக் கேட்டேன். "தெய்வம்! உனக்கு?" என்று அவர் கர்ஜித்தார். முன்பெல்லாம், என்னிடம் அவர்காட்டிய கோபத்துக்கும் இம்முறை காட்டியதற்கும் வித்யாசம் இருப்பதைக் கண்டு கொண்டேன். உண்மையிலேயே, அவர் என்மீது அடங்காதகோபம் கொண்டிருக்கிறார் என்பது தெரிந்துநான் பயமடைந்தேன். தம்பி! நான் ஒருதவறும் செய்து விடவில்லை. மாசுமருவற்றமனம். நான் கொடுமையை அனுபவித்து வந்தவள். என்னை அவர் விபசாரி என்று தூற்றவில்லை, குற்றம் சாட்டினார். நான் என்னசெய்வேன். காலைப் பிடித்துக்கொண்டு, "இப்படிச் சொல்லலாமா? நானா, விபசாரி! நீங்களா அப்படிச் சொல்வது? என்னை என்னென்ன பாடுபடுத்தினாலும் சரி, அந்த ஒருவார்த்தை மட்டும் சொல்ல வேண்டாம்." என்று கெஞ்சினேன். யாரோவருகிறசத்தம் கேட்டது.

"போதும் உன்வேஷம், போ உள்ளே. வருகிறான் ஒருவன், அவனை விசாரிக்கப்போகிறேன், உள்ளே இருந்துகேள், உன்யோக்யதையை அவன் வெளிப்படுத்துகிறான் பார்" என்றுகூறி, என்னைக் கழுத்தைப் பிடித்து நெட்டித்தள்ளினார், ஒரு அறைக்குள். கதவையும்சாத்தி, வெளியே தாள்போட்டுக்கொண்டார். அவரும், புதிதாக வந்தவனும் சில நிமிஷங்களுக்குப் பிறகு, பேச ஆரம்பித்தனர். வந்தவன் அடக்கமாகவும் அச்சத்துடனும் பேசலானான், உன் அப்பா ஆத்திரத்துடன், அதிகார தோரணையில்தான் பேசினார்.

"முதலியாரு கூப்பிட்டதாக, முருகன் சொன்னான், ஓடிவந்தேன். என்ன விசேஷமுங்க"

"ஏ! அந்தக் கள்ளக்கும்பிடு போட வேண்டாம். மறைக்காமல் நான் கேட்பதற்கு ஜவாப்சொல்ல வேண்டும். துளியாவது மறைத்தால் தோலை உரித்துவிடுவேன்"

"எஜமான்! ஏன் இம்மாங் கோவமாப் பேசறிங்க. என்னை என்ன கேட்கப்போறிங்க. நான் எதுக்காக, எதைத்தான் மறைக்கப் போறேன்."

"சரிடா, கதைஎல்லம் அளக்காதே. உண்மையைச் சொல்லிவிட்டா, என்ன நடக்குமோன்னு பயப்படாதே."

"பயம் ஏனுங்க நமக்கு. நான் என்னதப்புச் செய்தேன். மனுஷனுக்கு மனுஷன் பயம் ஏனுங்க!'

பளீர்! பளீர்! என்று அறையும் சத்தம், ஐயோ! ஐயோ! சாமி!முதலியாரே! என்று அவன் அழுகிற சத்தம், படவா! பயமா இல்லை! மனுஷனுக்கு மனுஷனா! பயம் இல்லாமேத்தானேடா பயலுக தலைகால் தெரியாமே ஆடறிங்க,என்று உன் அப்பா கூவுவது, இவைகளைக் கேட்டு, நான் அறைக்குள்ளே அடைப்பட்ட நிலையிலே, ஒன்றுந் தோன்றாமல், மருண்டேன்.

"நடந்ததைச் சொல்லணும், நாவை அடக்கிப்பேசவேணும்"

"ஆவட்டுங்க."

"பூஜாரி புண்யகோடியும் நீயும், இரண்டு நாளைக்கு முன்னே,குடிக்கப்போனிங்களேல்லோ"

"அவன் குடிச்சானுங்க, நான் வேறே வேலையா அந்தப்பக்கம் போனேன்"

மறுபடியும், பளார் என்ற சத்தம். அவன் அழுதுகொண்டே, "ஆமாங்க! போனோம், குடிச்சோம்".

"கழுதே! குடிக்கிற நாய்,குடிக்கறதில்லேனு ஏண்டா பொய் பேசறே"

பூஜாரியும் அவனும் சேர்ந்து குடித்துப் புரண்டால் இவருக்கு என்ன, ஏன் அவனைக் கூப்பிட்டு வந்து அடித்து, அதைக்கேட்க வேண்டும், என்னை அனியாயமாக விபசாரி, என்று கூறினதற்கும், குடிக்காரனை அடிப்பதற்கும்என்ன சம்பந்தம், ஒன்றுமே விளங்கவில்லையே என்று நான் எண்ணித்தவித்துக்கொண்டிருந்தேன். அவர்கள் பேச்சைக்கூர்ந்து கவனிக்கலானேன்.

"கள்ளுக்கடையிலே, என்னடா பேச்சுநடந்தது, உனக்கும் அவனுக்கும்"

"ஒண்ணுமில்லிங்களே"

"உடம்பு ஊறுதா?உள்ளத்தைச் சொல். புண்யகோடிஎன்னசொன்னான் உன்னிடம்.?"

"எதைப்பத்திங்க"

'எதைப்பத்திங்க! எதைப்பத்திப்பேசினீர்கள்னு நான் துரைகளுக்குக் கவனப்படுத்தணுமா? மறுபடியும் அடிகொடுக்கும் சத்தம்! இந்தத்தடவை சத்தம் தப்பு தப்பு என்று கேட்டது. "செருப்பு அறுந்துவிடும் இப்போ" என்றார் உன் அப்பா, அதிலிருந்து,அவனைச் செருப்பினால் அடிக்கிறார் என்று தெரிந்துகொண்டேன்.

"டே! பூஜாரிப்பயல், என்சம்சாரத்தைப்பத்தி என்ன பேசினான்?" என்று கேட்டார். நான் பயந்து கதவோடு கதவாகஒட்டிக் கொண்டு, அவன் வாயிலிருந்து என்னபதில் வருகிறது என்று உற்றுக்கேட்டேன். ஒரு விநாடி, இரண்டு மூன்று விநாடிகள் பதில் இல்லை.

"டே!"—உன் அப்பாவின்குரல், அதுவரை நான் எப்போதும் கேட்டறியாத கடுமையுடன் இருந்தது அந்தக்குரல்.

"எப்படிச் சொல்றதுங்க?" அவன் அழுகுரலில் சொன்னான்.

"சொல்லு! சொல்லாவிட்டால் உன்னை உயிரோடுவிடமாட்டேன். நீயும் அந்தப்பூஜாரியும் கள்ளுக்கடைக்குப்போய் என்னென்ன பேசிக்கொண்டிருந்தீர்கள் என்பது எனக்குத் தெரியும். மறைக்காமல் சொல்லு. விடமாட்டேன் உன்னை"

"அவன், குடிவெறியிலே, என்னமோ சொன்னானுங்க!"

"அதைத்தாண்டா, சொல்லச் சொல்கிறேன் உன்னை"

"உங்க எதிரிலேசொல்லக்கூடிய பேச்சு இல்லிங்களே அந்தப்பாவி சொன்னது"

"வீணாக, உதைபட்டுச்சாகாதே உள்ளத்தைச் சொல்லு"

"அம்மாவைப்பத்தி அவன் குடிவெறியிலே என்னென்னமோ உளறினான்."

"அம்மா! அந்தக்கழுதைமுண்டையைப்பத்தி என்னடா சொன்னான் அந்தநாய், சொல்லுடா முழுதும்"

"புண்யகோடிப் பயலுக்குப் பொம்பளைப் பைத்யம் ஜாஸ்திங்க. தெரிஞ்சவங்க, அதனாலேதான் மந்திரத்துக்குக் கூப்பிடுவதில்லைங்க"

"அவன் சொன்னதைச் சொல்லுடா, கதை பேசிக்காலத்தை ஓட்டாதே"

"அம்மாவைப்பத்திக் குறைவாப் பேசினானுங்க. ரொம்ப ஷோக்குடா, அந்தப்பொம்பளை. கிட்டத்தட்டமுடிஞ்சுபோன மாதிரிதான். புண்யகோடிக்கிட்ட எந்தப்பொம்பளையடா, இஷ்டப்படாமே போவான்னு என்னென்னமோ உளறினானுங்க"

படுபாவி! என்னைப்பற்றிக்கள்ளுக்கடையிலே கண்டபடி பேசி, என் கணவர் என்மீது சந்தேகப்படும்படி செய்துவிட்டாயே. நீ நாசமாய்ப்போக என்று நான் பூஜாரியைத்திட்டினேன், கைகளை முறித்துக்கொண்டேன். ஆனால், எவனோ குடிகாரன் என்னமோ உளறினால், அதற்காக என்னைக் கொடுமைப்படுத்துவதா, உன் அப்பா,என்று எண்ணினேன். அவன் சொல்லிவந்ததை நிறுத்திக்கொண்டான், மேலும் சொல்லும்படி உன் அப்பா, கட்டளையிட்டார். அவன், மளமளவென்று பேசலானான்.

"புண்யகோடி, அம்மாவுக்குப் பேயோட்ட வந்தானும். அம்மா அழகிலே அவனுக்கு ஆசைபிறந்துதாம். மெதுவாகப், பூஜைசெய்கிற மாதிரி, கையைப்பிடிப்பதும், கண்ணைத்துடைப்பதுமாகஇருந்தானும். முதலிலே அவனுக்குப் பயமாகத்தான்இருந்துதாம். பிறகு, அவனைமந்திரிக்கச் சொல்லிவிட்டுத் தனியாக விட்டுவிடஆரம்பிச்சிங்களாம். அவனுக்குத் தைரியம் பிறந்துதாம். சேஷ்டை செய்வானும். அம்மா கூவுமாம்! அவன் அதெல்லாம் பேயின் கூச்சலுன்னுசொல்றதாம் உங்களிடம். விபூதி பூசுவதாகச் சொல்லிக் கொண்டு, கிட்டே போவானும். பேய்எழுந்து ஆடப்போவுதுஎன்றுசொல்லிக்கொண்டு அம்மாவை அப்படியே சேர்த்துக் கட்டிக் கொள்வானும். இன்னும் ஒரு பத்துநாளையிலே முடிஞ்சுவிடும்னு சொன்னானுங்க. அம்மாவுக்குவந்துங்க, வலதுமார்லே துவரம்பருப்பு அளவுக்கு மச்சம்கூட இருக்குதாம்"

(3-ம் பக்கம் பார்க்க)




உறையூர்

## எஸ். எம். எஸ். ஆர். பி.

சொந்தக் கைத்தறி கலர்புடவைகள் & 3-அகலம் தோத்திகள், சரிகை அங்க வஸ்திரங்கள்.

100, 80-நெ. நூலில் தயார் செய்யப்பட்டது. உத்திரவாதமுள்ள சாயம். உறுதியான—உடை, சுத்தமான—சரிகை, உயர்தரமான—ரகங்கள், நாணயமான விலைகள்.

S. M. S. R. பாலசுந்தரம்,
கைத்தறி ஜவுளி வியாபாரம்,
34, பஞ்சவர்ணஸ்வாமிகோவில் தெரு,
உறையூர் p. o. திருச்சி.

# திராவிட நாடு

காஞ்சி] 16—6—46 [ஞாயிறு


## அவருடைய இலட்சியம்!

"பாம்புகளுடனும் தேள்களுடனும் பயமில்லாமல் விளையாட வேண்டுமென்பதே என்னுடைய இலட்சியம். ஆனால் இந்த நாள் வரை அது வெறும் ஆசையாகமட்டுமே இருந்து வருகிறது. அது நிறைவேறுமோ நிறைவேருதோ, அப்படி நிறைவேறுவதாய் இருந்தாலும் எப்பொழுது நிறைவேறுமோ அறியேன்"

இந்த வாசகத்தைப் படித்த உடனே, இப்படி—யார் சொல்லியிருக்கக்கூடும்? ஒரு பாம்பாட்டியோ, தேள் மருந்து விற்பவனோ தான் சொல்லியிருப்பான் என்று நீங்கள் ஒருக்கால் நினைக்கலாம், பாம்பாட்டி தானே பாம்போடு விளையாடுகிறுன்; தேள்மருந்துவிற்பவன்தானே தேளைத்தன் உடம்பில் உலாவவிட்டு விளையாடுகிறுன்; இதைக் கூறுவதற்கு ஒரு கட்டுரை எழுதுவதா என்றுமே நீங்கள் நினைக்கலாம். நீங்கள் நினைப்பது போலவேதான், நாமும் இதுவரை நினைத்திருந்தோம், பாம்புடனும் தேளுடனும் விளையாடுபவர்கள் பாம்பாட்டியும் தேள்கடி மருந்து விற்பவனும் தான் என்று.

ஆனால், இப்போது பாம்புகளுடனும் தேள்களுடனும் விளையாடுவதைஒருவர்தன்னுடையஇலட்சியமாகக் கொண்டிருக்கிருர். 'இலட்சியம்' என்பது ஒருவனுடைய வாழ்க்கையின் குறிக்கோள்; அதாவது, ஒருவன் தன்னுடைய வாழ்நாளில், தனக்காகவோ அன்றிப் பிறருக்காகவோ செய்யவேண்டுமென்று எண்ணுகின்ற காரியங்கள் பலவற்றுள், முக்கியமானதாகவும் இன்றியமையாததாகவும் கருதப்படும் காரியத்திற்கே, 'இது ஒன்றுதான் என்னுடைய வாழ்க்கையின் இலட்சியம் அல்லதுகுறிக்கோள்' என்று சொல்லப்படுவது.

இந்த இலட்சியம் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக இருக்கும். அவர்களின் வாழ்க்கையின்அமைப்பைப்பொறுத்துஇலட்சியங்களும் வெவ்வேறு விதமாக அமையும். 'பாடகனுக்குப் பாடுவதே அவனுடைய வாழ்க்கையின் இலட்சியம். பணக்காரனுக்கு மேலும் மேலும் பணம் திரட்ட வேண்டுமென்பதே இலட்சியமாக இருக்கும். திருடன், திருட்டுத் தொழிலையே தன்னுடைய இலட்சியமாகக் கொள்வான். இப்படியே ஒவ்வொருவரும் தங்கள் வாழ்க்கைத்தரத்தை ஒவ்வொரு இலட்சியத்தை அடிப்படையாகக் கொண்டே நடத்திச் செல்வர். வாழ்க்கையில் மேற்கொள்ளப்படும் இலட்சியங்களைத் தமக்காகமட்டும் மேற்கொள்பவர்களும், தமக்கும்பிறர்க்குமாகமேற்கொள்பவர்களும்; தமக்கில்லாவிட்டாலும், தாம் மேற்கொள்ளும் இலட்சியம் பிறருக்குப் பயன்பட்டால்போதும் என்று மேற்கொள்பவர்களும் என்பதாகப்பல முறைகள் உண்டு.

ஆனல்இங்கேபேசப்படும்இலட்சியம், அதனை மேற்கொள்பவருக்கோ அன்றிப் பிறருக்கோ பயன்படாதது. தனக்கும் பயன்படாது; அதனால் பிறருக்கும்பயன் இல்லை என்ற ஒரு இலட்சியத்தை (பாம்புடனும் தேளுடனும் விளையாடுவதை) மேற்கொண்டுள்ளவர் யார் என்பதை நாம் சொன்னால் நீங்கள் நம்பமாட்டீர்கள்; "அவரா? அவர் ஒருபோதும் இப்படிச் சொல்லியிருக்க மாட்டார்! இது வெறும் பொய்!" என்றுதான் சொல்வீர்கள். பேரைச்சொன்னால் நீங்கள் திகைத்துப் போவீர்கள். எனவேநாம்பேரைச்சொல்லவிரும்பவில்லை. இவ்வாரத்தில் வெளியிடப்பட்ட "அரிஜன்" பத்திரிகையைப் புரட்டிப்பாருங்கள். அதில் "அஹிம்சையின் தாத்பர்யம்" என்றுஒருகட்டுரை காணப்படும். அந்தக்கட்டுரையை எழுதியவர்தான், தன்னுடைய இலட்சியம் பாம்புகளுடனும் தேள்களுடனும் விளையாடுவது என்று குறிப்பிட்டிருக்கிருர். அதைப்படித்தபின், அதை எழுதியவர் யார்என்பதையும், அவர் ஏன் பாம்புகளுடனும் தேள்களுடனும் விளையாட விரும்புகிருர்? அதனால் அவருக்கோ அன்றிப்பிறருக்கோ ஏற்படும் பயன்என்ன? இந்த இலட்சியத்தை அவர் ஏன் மேற்கொண்டார்? இந்தலட்சியம் 'இராமநாமம்' கை கூடினால்தான் நிறைவேறும் என்றுகூட அந்தக் கட்டுரையில் எழுதியிருக்கிருரே! இதன்மகத்வம் யாதோ? என்பனவற்றையும் யோசித்துப் பாருங்கள். யோசனைக்கும் அகப்படாவிட்டால் உடனே வார்தாவுக்கு எழுதுங்கள்.

—

## காந்தியாரின் கோபம்

5-ம் பக்கத் தொடர்ச்சி

சாவும், சரியான செயல்கள்என்று கூறிவிட முடியாது. குற்றம் குற்றந்தான், கொலை கொலைதான், நோக்கம் எதுவாக இருந்தாலும் சரி, உன்னதமான நோக்கத்துக்காகச்செய்யப்பட்டதாலேயே, அந்தக்கொலை குற்றமற்றதாகிவிடாது" என்று எழுதியிருக்கிருர்.

அதுமட்டுமல்ல! அவர்களை வரவேற்பதும், புகழ்வதும்கூடாதாம். வீரர்கள், தியாகிகள் என்று, அவர்களைப்புகழ்வது தவறு என்று கண்டிக்கிருர். இந்த மனப்பான்மை நாட்டுக்கே சாபக்கேடாம்! சுதந்திரத்தைக்கூடக் கெடுத்துவிடுமாம். அவர்களை விடுதலை செய்தது சரி, ஆனால் வீரரே, தீரரே, தியாகியே, என்று புகழ்வதுகூடாது என்கிருர் காந்தியார்.

"பொது வேலைக்காக எனக்குப் பணம் தேவையாக இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். அதற்காகநான் திருடினால் அது திருட்டுத்தான். தேசபக்தி என்ற உன்னதப் பெயர் சூட்டப்பட்ட ஒவ்வொருகுற்றத்தையும் நாம் போற்றுவது என்று ஏற்பட்டுவிட்டால் தேசம் பெரும் கஷ்டத்துக்கு ஆளாகவேண்டியிருக்கும்" என்று அரிஜனில்எழுதுகிருர்.

இப்படி இத்தகையவர்களைப் போற்றுவதையும் புகழ்வதையும் பொதுமக்கள் ஆமோதிப்பதிலிருந்து, பொது மக்கள் தவருகப் போதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறதாம்.

காந்தியாரின் இந்த வியாக்யானமும் கண்டனமும், ஆகஸ்டு வீரர்களின் மனதை மிக மிகவாட்டும் என்பதை நாம் உணர்கிருேம். தேசத்துக்கான திருப்பணி என்று நம்பி அவர்கள் செய்த காரியத்தைக்காந்தியார் இப்படித்திடீரென்றுகண்டித்துத், தங்களைக் கேலி செய்வார் என்று, அந்தத் தோழர்கள் கனவிலும் கருதி இருக்கமாட்டார்கள். நாமும் கருதினதில்லை. ஆகஸ்டு வீரர்களுக்கு அபுல்கலாம் அஜாத் பொற்பதக்கம் அளித்த போதும், ஆகஸ்டு வீரர்களைப்பண்டிதஜவஹர் வரவேற்றபோதும், காந்தியார், இப்படிக் கண்டிக்கவில்லை. இப்போது கண்டிக்க முன் வந்த காரணம் என்ன?

குலசேகரபட்டினம் தோழர்கள் போன்றவர்களின் கதிதான் என்ன ஆவது? காந்தியாரின் கண்டனத்தை அவர்கள் எப்படிச்சகிப்பார்கள். எதிர்க் கட்சிக்காரரும், ஏகாதிபத்யமும் கூருத வாசகத்தைக்காந்தியார்கூசாது கூறியதன் காரணம் என்ன? அந்தத்தோழர்கள், சமுதாயத்திலே போற்றப்படக்கூடாது, வீரர், தியாகிஎன்று அழைக்கப்படக்கூடாதுஎன்றுகாந்தியார்கட்டளைபிறப்பிக்கிருர்; கொலை கொலைதானே, என்கிருர். தேசபக்தி என்ற உன்னதமானபெயரைச் சூட்டிவிட்டால் போதுமா என்று கேட்கிருர். இப்படிக் காந்தியார் கண்டிப்பதால், அந்தத் தோழர்களின் மனம் உடையாதா என்பதுமட்டுமல்ல நம் கேள்வி, பொதுமக்களுக்கு, அந்தத்தோழர்களிடம் உள்ள மதிப்பும் அன்பும் குறையாதா? அந்தத்தோழர்கள் மதிப்பிழக்கவேண்டுமென்றுகாந்தியார கருதுவது ஏன்? மதிப்பிழந்து அவர்கள் சமுதாயத்திலே உலவித்தான் என்ன பயன்? ஏன் காந்தியார், இப்படிக்கண்டிக்கிருர்.?

காரணம் ஒன்று இருக்கிறது, ஆனல் அதை நம்முடைய காங்கிரஸ்நண்பர்கள் நாம் சொன்னால் நம்பமாட்டார்கள்.

இன்று, ஆகஸ்டுவீரர்கள், என்ற புதிய புகழ்—புதிய செல்வாக்குப் பெற்றவர்கள் அனேகர். அவர்களின் புகழ் நாடு முழுதும் பரவுவதுகாந்தியாருக்குப்பிடிக்கவில்லை. நெடுங்காலமாகத்தமக்கு இருந்து வந்த செல்வாக்கைத் திடீரென்று தோன்றிய பலர் பங்கு போட்டுக்கொள்வது, அவருக்குச்சகிக்கமுடியாத துக்கம் தருகிறது. நாளாவட்டத்திலே, செல்வாக்கு உரியவர்களாக, இவர்கள் வந்துவிடுவார்கள் என்றகவலைஅவருக்கு. மேலும், இந்த ஆகஸ்டு வீரர்களின் எதிர்ப்பினுலேயே, தமது அருமைச் சம்பந்தி ஆச்சாரியார், செல்வாக்கு இழக்க நேரிட்டது என்பதை எண்ணும்போது காந்தியாருக்குக் கோபம் பொங்குவது இயற்கை. இன்று காங்கிரஸ் வட்டாரத்திலே, இரண்டே இரண்டு கோஷங்களே செல்வாக்குடன் உள்ளன, ஒன்று ஆகஸ்டு வீரர் வாழ்க! மற்றொன்று INA, வாழ்க! இரண்டும், காந்தியாருக்குப் பிடிக்காதவை; தமக்குப்போட்டிச் சக்திகள் என்றே அவர் கருதுகிருர். அதனாலேயே, ஆகஸ்டு இயக்கக்காரர்களை, வீரர், தியாகி, என்று புகழக்கூடாது எனக் கண்டிப்பாகக் கூறிவிட்டார்.

— —

## ரங்கோன் ராதா

2-ம் பக்கத் தொடர்ச்சி

"அடபாதகா! உண்மையிலே அப்படித்தான் எனக்கு மச்சம் இருக்கிறது. காமச் சேஷ்டையா செய்துகொண்டிருந்தாய் மந்திரிப்பதாகச் சொல்லிக்கொண்டு" என்று நான் அந்தப் பூஜாரியைச் சபித்துக் கொண்டிருந்தேன் உள்ளே. பேச்சு நின்றுவிட்டது. கொஞ்சநேரம்கழித்து உன் அப்பா, "டேய்! புண்யகோடியும் நீயும் பேசினபோது யார் இருந்ததுகூட, குறிப்பாகச் சொல்ல முடியுமா?" என்றுகேட்டார். "உங்கமாமனர் வீட்டுத் தோட்டக்காரன் இருந்தான்" என்ருன் அவன். "சரி! நீ போ! அந்தப் புண்யகோடிக்குச் சொல், நாளைக்கு இந்த ஊரிலே அவனை நான்கண்டால், தலைஇராது என்றுசொல்லிவிடு, போ" என்று உத்தரவிட்டார். அவன்போய் விட்டான். நான்உள்ளே இருந்து, "அபாண்டம்! பழி! அன்யாயம்! அந்த நாசமாய்ப் போனவனைக் கொன்றால்கூடத் தோஷமில்லை. கதவைத்திறவுங்கள். பூஜாரியை விளக்குமாற்றாலே அடிக்கிறேன் என்றுநான் கூவினேன். எனக்குப் பேய்பிடித்ததாகக்கூறி அந்தப் பூட்டனை அவர்தான் அழைத்துவந்தார். அந்தப்பாதகன், என்னைப் பற்றிக் கெட்டஎண்ணம் வைத்தால் நான் என்ன செய்ய முடியும் அதற்கு. நான்கெஞ்சினேன், அழுதேன், கதவைத் திறக்கும்படி. உள்ளே இருந்து கதவைத் தடதடவென்றுதட்டினேன். கதவை அவர் திறக்கவில்லை. உற்றுக்கேட்டேன், கதவைப் பூட்டும் சத்தம் கேட்டது." (தொடரும்)

## பாரதிதாசன் நிதி

### திண்டுக்கல் சக்தி நாடக சபையாரின் அன்பளிப்பு.

புரட்சிக்கவி பாரதிதாசன் அவர்களின் நிதிக்காகத் திண்டுக்கல் சக்தி நாடகசபையார், தங்களுடைய ஒரு நாள் நாடக வசூலை அன்பளிப்பாக உதவியுள்ளனர். கவிஞர் நிதிக்காக 4—6—46-ல் நடைபெற்ற நாடகத்திற்குத் திண்டுக்கல் சப் மாஜிஸ்ரேட் தோழர் என். சி. லட்சுமண நாயுடு அவர்கள் தலைமை வகித்தார். நாடகத்தில் ரூபா 1145—0—0 வசூலாயிற்று. சக்தி நாடக சபையார், கவிஞரிடமுள்ள மதிப்பையும் பற்றுதலையும் இந்த அன்பளிப்பின் வாயிலாகத் தெரிவித்துக்கொண்டனர்.

இதற்குத் துணையாயும் தூண்டுகோலாயும் இருந்த கரந்தைத் தோழர் சண்முகவடிவேல் அவர்களுக்கும், நாடகத்திற்குத்தலைமை வகித்த தோழர் என். சி. லட்சுமண நாயுடு அவர்களுக்கும், இந்தப் பெரிய நன்கொடையை அளித்த சக்தி நாடக சபையின் அமைப்பாளர் தோழர் டி. கே. கிருஷ்ணசாமி அவர்களுக்கும் கவிஞர் நிதிக் கமிட்டியின் சார்பாக எங்கள் மனமுவந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகிருேம்.

கவிஞர் நிதிக்காக இதுவரை சேர்ந்துள்ள தொகை:—

**ரூ. 16,666-4-0**

நிதியளித்தவர்கள் விபரம் கீழே தரப்படுகிறது:—

டில்லி என். பாலசுப்ரமணியம் ரூ 10; ஆவடி எஸ். சந்திரன்மூலம் ரூ 13; சென்னை ஏ. ஜீ. வெங்கடாச்சாரி ரூ 5; சென்னை ஏ. துரைசாமி ரூ 2; எட்டயாபுரம் பி. கனியப்பா ரூ 1; அ.மு. மூக்காண்டி ரூ1; எம். எஸ்.பிள்ளை ரூ1; ஆர்.கே.சாமி ரூ1; எஸ். சுந்தர முதலியார் ரூ 1; எட்டு அணுவீதம் கொடுத்த பஞ்சாப் தோழர்கள்:- பிச்சய்யா, பிரிஸ், ரகுநாதன், குமாரசாமி, சீனுவாசன், வெங்கடாசலம், இராசகோபாலன், நரசிம்மன் சுப்ரமணியம், கன்னயா, சுவிசேசமுத்து, எஸ். பிச்சை, முத்தழகன், முத்துவேலு; வளவனூர் திராவிடர் கழகத்தார் ரூ 10; திருச்சி தியாகராசன் அணு எட்டு; மாதவராவ் அணு எட்டு.

கோயமுத்தூர் இராமகிருஷ்ணன் ரூ 1; போபால் மிலிட்டரி தோழர்கள்:— கண்ணன் ரூ 5; துரைஅரசு ரூ 5; நாராயணசாமி ரூ 5; சீனி. திருவேங்கடம் ரூ 2; தைரியநாதன் ரூ 2; போபால் தோழர்கள் ஒரு ரூபா வீதம்:— மாணிக்கம், நடராஜ், ஓர்து, ஜோசப்வில்லியம், கன்னய்யன், பால், மாசிலாமணி, பரமேசுவரன், இராமமூர்த்தி, சுப்பிரமணியன், இலக்குமணன். கிருஷ்ணன், சந்திரகாசன், ராஜாராவ், வெங்கட்டராமன், ஒளியம்மை, மாதவன் அணு எட்டு.

## படிப்பு வராத

6-ம் பக்கத் தொடர்ச்சி

"இருக்கிறுர்கள் என்று பார்க்க வேண்டும். இதேமுறையில் முதல் 2-ம் காலம் பார்க்க வகுப்பு மாணவர்களில் எவ்வளவு பங்கு மூன்ருவதில் இருக்கிறுர்கள் என்று கணக்கிட்வேண்டும். அதன் படிபார்த்தால்,

| | பார்ப்பன மாணவர்கள். | திராவிட மாணவர்கள். |
|---|---|---|
| 1-வது வகுப்பு | 1000 | 1000 |
| 2-வது ,, | 773 | 637 |
| 3-வது ,, | 699 | 500 |
| 4-வது ,, | 674 | 418 |
| 5-வது ,, | 670 | 379 |
| 1-வது பாரம் | 423 | 100 |
| 2-வது ,, | 380 | 75 |
| 3-வது ,, | 355 | 61 |
| 4-வது ,, | 257 | 28 |
| 5-வது ,, | 215 | 21 |
| 6-வது ,, | 199 | 18 |

மேலே குறிப்பிட்டபடி இந்கக்கட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ளவை விகிதாச்சாரத்தைக் குறிப்பவை. அதாவது முதல் வகுப்பிலுள்ள ஒவ்வொரு ஆயிரம் பார்ப்பன மாணவர்களுக்கும் 2-வது வகுப்பில் 773ம், மூன்ருவதுவகுப்பில்699ம் இருக்கிறுர்கள். திராவிட மாணவர்களில் முதல் வகுப்பில் 1000 பேரிருந்தால் 2-வது வகுப்பில் 637ம், 3-வதில் 500ம் இருக்கிறுர்கள்.

இந்தக் கணக்கைப் பார்த்தால் திராவிட மாணவர்களின் கல்விநிலையின் மோசம் விளங்கும். குறிப்பாக எலிமண்டரி பள்ளியைவிட்டு நடுநிலைப்பள்ளி (மிடில்ஸ்கூல்)வரும்பொழுது பார்ப்பன மாணவர்களின் விகிதாச்சாரம் 423-ஆகிறது. திராவிட மாணவர்களின் விகிதாச்சாரம் 100 ஆகிறது. உயர்தரப்பள்ளி (ஹைஸ்கூல்)க்கு வரும்பொழுது பார்ப்பனர் விகிதாச்சாரம் 257 ஆகவும், திராவிட மாணவர்களின் விகிதாச்சாரம் 28 ஆகவும் குறைந்து, 6-வதுபாரத்தை அடையும் பொழுது பார்ப்பனர்களின் விகிதம் ஆயிரத்துக்கு 199 ஆகவும், திராவிட மாணவர்களின் விகிதம் 18-ஆகவும் குறைந்து விடுகிறது.

படிப்பு வாரத இனம்! உண்மை, ஏன் வரவில்லை? சமுக, பொருளாதார, அரசியல் பிடிகளில் சிக்குண்டு, பரங்கியின் கொலுமண்டபமாக, பனியாவின் பண்டகசாலையாக, பார்ப்பனரின் வேள்வி மண்டபமாக ஆக்கப்பட்டுள்ள திராவிடத்தில் கல்விமலர் பூக்காததில் ஆச்சரியமில்லை, திராவிடன் மனிதனுக மதிக்கப்படாத இடத்தில், பரங்கியின் கொலு மண்டபத்தில் ஒரு படிக்கட்டாக, பனியாவின் பண்டகசாலையில் விலைபோகும் பண்டமாக, வேதியனின் வேள்விமண்டபத்தில் பலியிடப்படும் ஆடாகத் திராவிடன் இருக்கும்பொழுது அவனுக்குக் கல்வி எதற்கு? வாழ்வுஎதற்கு? பிணிவாடையும், பிணவாடையும் வீசுகின்ற இடத்தில் கல்விவாடை வாராததில் ஆச்சரியமில்லை. வெள்ளைக் கலையுடுத்தி, வெள்ளைப் பணிபூண்டு, வெள்ளைக்கமலத்தே வீற்றிருக்கும் கல்விமங்கையோ வெள்ளையாடை விப்பிரனிடம் தஞ்சம் புகுந்துள்ளாள்.

படிப்பு வாராதஇனம், ஒருஇனத்துக்கு மட்டும் கல்விவாராமல் இருப்பானேன்? என்ற கேள்வியைவிட, ஒருஇனத்திடம் மட்டும் கல்விவாராமல் இருப்பதேன்? என்றகேள்வியைத் தேசியத் தோழர்களுட்பட அனைவரும் கேட்கவேண்டும். குப்பைகூட்டும் முனியம்மாவின் மகன் சிங்காரம் மாட்டை மேய்ப்பது தவிர வேறு தொழிலில்லாதவன், வயிற்றுப் பிழைப்புக்கு வேறு வழியில்லாதவன். வேலைக்கார எழுமலைக்கு மூன்ருவது வகுப்பிற்கு மேல் படிக்கமுடியவில்லை, அதற்குமேல் கல்விச்சாலையில் காலத்தைக்கழித்தால் வீட்டில் கலயத்தில் கஞ்சி யிருக்காது என்பது அவனுக்குத் தெரியும், முதல்வகுப்பில் சரியாகப்படித்துக்கொண்டிருந்த முனியன், இரண்டாவது வகுப்பில் சரியாக வருவதில்லை, மூன்ருவது வகுப்பில் முழுமோசம். நான்காவது வகுப்பில் அவனுடைய பெயரை பேரேட்டில் காணேம். இரண்டாண்டு கழித்துப்பார்த்தால் வீதியிலே மூட்டை சுமந்து செல்கிறுன். உழைக்கும் திராவிட இனமக்களிடமிருந்து, உழைத்து உழைத்து உருமாறிய உழைப்பாளிகளிடமிருந்து, பாடுபட்டும் பலன் காணு பாட்டாளி இனத்திடமிருந்து, கஞ்சி பறிக்கப்பட்ட அன்றே கல்வியும் பறிக்கப்பட்டு விட்டது. சமுகத்தில் நீதி தவறியபின் பள்ளிக்கூடங்களில் சமத்துவம் கிடைக்கவில்லை. கல்விக்கூடங்களைக் கட்டிமுடித்தஇனம் மறுபடியும் கல்லுடைப்பதிலும், களிமண் குழைப்பதிலும், இருக்கிறதேயன்றி, நிலைமையிலே மாறுதலில்லை. உழைப்பவனின்கைகளில் சேறுவழிகிறது. உழைக்காத இனம் பிறர் உழைப்பை உறிஞ்சி. உப்பும் முப்புரிக்கூட்டத்தினரின் கைகளிலே் எடுதவழ்கிறது. வரிப்பணத்தில் பெரும் பகுதியைத் தருகிற மக்களினம் சாலையிலே தெம்பாங்கும், தோட்டத்திலே ஏற்றப்பாட்டும், தெருவிலே வண்டியிழுக்கும் 'ஏஏ' ஒலியும்செய்துகொண்டிருக்கிறது. முனியன் போல யாராவது ஓரிருவர் முதல் வகுப்பிலே படிக்கும் திராவிட மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்திவிட்டு, மூன்ருவது வகுப்புவந்ததும் பழையவேலைக்குத் திரும்பி விடுகிறுர்கள். இதேகதைதான் வண்டியோட்டும் வரதன், பங்காஇழுக்கும் பழனி, விறகு உடைக்கும் வீரப்பன், வேலைக்கார எழுமலை, இவர்களுடையதும். சிறுவயதில் வீட்டில் செய்யும் குறும்புகளுக்குத்தண்டனையாகப்பள்ளிக்கூடத்திற்குஅவர்கள் அனுப்பப்படுகிறுர்கள். வயதுவந்ததும், உயர்தரபடிப்பிலே முனையும்பருவத்தையல்ல, வேலைசெய்வதற்குப் போதுமான வயது வந்ததும் வந்தவழியேதிரும்பி விடுகிறுர்கள். சென்னைபோன்ற இடங்களில் நடுப்பகலில் மாணவர்களுக்கு உணவு வழங்கப்படுகிறது. அந்தப்பள்ளிக்கூடங்களில் வழங்கப்படும் கல்வியல்ல, கஞ்சிதான் ஏழைச்சிறுர்களை பள்ளிக்கூடங்களில் கொண்டுவந்துசேர்க்கிறது, இவர்களாவது பள்ளிக்கூடத்தின் தலைவாசலை மிதித்தவர்கள். ஆனுல் பள்ளிக்கூடத்தையே பார்த்தறியாத பள்ளர் பறையர், மாடுமேய்ப்பவர், கல்லுடைப்பவர், புல்சுமப்பவர், களைஎடுப்பவர், துணி நெய்பவர், தோல் தைப்பவர்கள் இவர்களின் தொகை நாட்டில் பெரும் பகுதி. அதேநேரத்தில் அவர்களுடைய உழைப்பிலே உதித்த நாட்டு வருமானத்தில் ஒருபகுதி கல்வித்துறையில் பாடுபடாத இனத்தைப் பண்புறச் செய்கிறது.

மேலே குறிப்பிட்டுள்ள புள்ளிவிவரங்களில்தாழ்த்தப்பட்டோர்களின்தொகையும் சேர்க்கப்பட்டுள்ளது. அவர்களது கல்விநிலை கவனிப்போரின் கண்களில் புனலையல்ல, கனலைத்தான் எழுப்பும். சமுகக்கட்டுப்பாடெனும் பயங்கரச் சுழலில் சிக்கியுள்ள தீண்டப்படாத, தாழ்த்தப்பட்டோர் தொகை 1941 சென்சஸ் படி 80,68,492. இந்த 80 லட்சம் தீண்டத்தகாதவர்களில் பத்தாவது வகுப்பைத் தீண்டுபவர்களின் தொகை 600. நூற்றுக்கு 3 பேராக உள்ள பார்ப்பனர்களில் பத்தாவது வகுப்பில் படிப்பவர் தொகை 9433. நூற்றுக்கு 16 பேராக உள்ள தாழ்த்தப்பட்டோரின் தொகை 600. இது 1944ல் தாழ்த்தப்பட்டோரின் உயர்தரப்பள்ளிக்கல்வி நிலை. பிரசாரபலமும், பணபலமும், தற்பொழுது அரசியல் பலமும் பெற்றுவிளங்கும்தேசியத்திருச்சபையின் அரைநூற்ருண்டு வாழ்வுக்குப்பின், ஆட்டும் சுட்டுவிரல் கண்டு ஆடும் மக்கள்கூட்டத்தைப் பெற்றுள்ள மகாத்மாவின் கால்நூற்ருண்டு அரசியல் வாழ்விற்குப்பின், சென்னை மாகாணத்தில் 80 லட்சம்பெருங்குடிமக்களிடையே பத்தாவதுவகுப்பைப்பார்ப்பவர்களின் தொகை 600. காந்திபக்தர்கள் தாழ்த்தப்பட்டோருக்கு அரிஜன் பட்டம்மட்டுமல்ல, பலப்பல பரிஜனப் பட்டங்களையளித்தாலும், "தீண்டாதாரின் சேரியில் காந்தியின் கனிவு" என்ற தலைப்புடன் ஒன்றல்ல, நூறுபடங்கள்பிரசுரிக்கப்பட்டாலும், "கண்ணன்காட்டிய வழி" எழுதிய கருப்புக்கண்ணுடிக்காரர்கள் காந்தி காட்டிய வழிக்குப்பலந்தேட "அம்பேத்காருக்கு மறுப்பு" எனஆயிரமாயிரம் புத்தகங்களை எழுதினுலும், தக்கர்பாபாவிலிருந்து, தாத்தாச்சாரியார் வரை அரிஜன சேவையெனும் அரிய வேலையிலீடுபட்டாலும், உண்மை நிலை மாறவில்லை. பட்டுப்பீதாம்பரமும் அத்தர் சந்தனவகைகளும், எப்படி பிணியாளனின் ஒடிந்தநிலைமை போக்காதோ அப்படியே தாழ்த்தப்பட்டோருக்குச்செய்வதாகக் கூறப்பட்டமேல்பூச்சுகள் அறியாமைக்கறையை அகற்றவில்லை, தாழ்த்தப்பட்டோருக்காக இரக்கங்காட்டி, அதே சமயத்தில் சனுதனிகளுக்கு இனிய மொழிகளைக்கூறி இருவரையும் ஒன்றுசேர்க்க நினைக்கும் சமாசகீதம் இருக்கும் வரை ஒன்றும் நடைபெருது. கல்விநிலை 80 லட்சத்துக்கு பத்தாவது வகுப்பில் 600 பேர்தான். வடநாட்டு வல்லபர்களும், தென்னுட்டுத் தேசியத்திருப்பிரம்மங்களும் இதைக் கவனிக்காவிட்டால் கூட நமக்கு வருத்தம்தோன்ருது. அவர்களுக்குத்தெரியும், ஆனுல் அதை அவர்கள் காட்டிக்கொள்வதில்லை. மாம்பலத்திலும், மயிலையிலும் மாம்பழநிறத்துடன் வாழும் கூட்டம், சூளையில் வாழும்கருங்கல்மேனியினர்பற்றிக்கவலை யெடுத்துக்கொள்ளாததில் ஆச்சரியமில்லை. ஆனுல் தேசியத்திராவிடத்தோழர்கள் கவலைப்பட்டிருக்கவேண்டாமா இந்தஅநீதியின் போக்கைக்கண்டு. அவர்கூர் கேட்டிருக்க வேண்டாமா வார்தாத்திட்டத்தில் இந்தவகையற்ருேரின் கல்வியறிவை வளமாக்க வழி இருக்கிறதா என்று. தக்களிநூற்ருல் தாழ்த்தப்பட்டோரின்நிலை உயருமா என்று. ராம்துன் பஜனையும், ராமநாம இசையும், கதராடையும், கர்ம வீரமும், அறியாமையிருளிலும், அடக்குமுறைக்கொடுமையிலும் ஆழ்ந்திருக்கும் அடிமைகளை எழச்செய்யுமா என்று. தேசியத்தோழர்கள் அடிப்படையானதிட்டங்களை கேள்விகேட்டதில்லை, நினைத்ததுமில்லை. ஆனுல் திட்டங்களைப் பரிசீலனை செய்தவர்கள்மீது சீறியதுண்டு. அவர்களுக்கு சமுகநிலை அரசியலில் சிறியதுண்டு.

கல்விக்கெனச் செலவு செய்யப்படும் 7-கோடியில்,

| | | |
|---|---|---|
| முதல் நிலை (பிரைமரி) கல்விக்கு | ரூ. | 3,13,89,434 |
| நடுநிலை (மிடில்ஸ்கூல்) கல்விக்கு | ரூ. | 16,94,939 |
| உயர்தர (ஹைஸ்கூல்) கல்விக்கு | ரூ. | 1,26,40,116 |
| மொத்தம் | | 4,57,24,489 |

இவ்வாறு பத்தாவது வகுப்பு வரை செலவு செய்யப்படும் 4 கோடி 57 லட்சத்தில் பலன்என்னவென்றுபார்த்தால், திராவிடமக்களின் குறைந்த கல்விநிலையும், நூற்றுக்கு 3 ஆக உள்ள பார்ப்பனர்களின் உயர்ந்தநிலையும்தான். பொதுவாகப் பார்க்கப்போனுல் ஏறத்தாழ ஒவ்வொரு ஆண்டும் 5 கோடியிலிருந்து 7 கோடிவரை கல்விக்காகச்செலவிடப்படுகிறது. அதன்பலனுகநாட்டிலே ஏற்பட்டுள்ள நிலை என்ன?

1941ல் எடுக்கப்பட்ட சென்சஸ்பற்றியமுடிவுகள் இன்னும் வெளியிடப்படவில்லை, ஆகவே அதற்கு முந்திய கணக்குப்படி எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் விகிதம் பின்வருமாறு.

எழுதப்படிக்கத்தெரிந்தவர்கள்

| | ஜனத் தொகையில் 100 | ஆண் களில் 100க்கு | பெண் களில் 100க்கு |
|---|---|---|---|
| பார்ப்பனர் | 53 | 80 | 28 |
| திராவிடர்கள் (பார்ப்பன ரல்லாதார்) | 8க்கு (7·7) | 14 | 2க்கு (1·6) |

ஆங்கிலம்எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள்

| | ஜனத் தொகையில் 100க்கு | ஆண் களில் 100க்கு | பெண் களில் 100க் |
|---|---|---|---|
| பார்ப்பனர் | 17 | 33 | 2 |
| திராவிடர் (பார்ப்பன ரல்லாதார்) | 1க்கு (0·6) | 1-ச-அ (1·2) | |

அதாவது பார்ப்பனர்களில் எழுதப்படிக்கத்தெரிந்தவர்கள்100க்கு 53, திராவிடர்களில்100க்கு8லும்குறைவு. பார்ப்பனஇனத்தில் ஆண்களில் 100க்கு 80 பேர் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள். நம்மினத்தில் ஆண்களில் 100க்கு 14 பேருக்குத்தான் படிக்கத்தெரியும். எழுதப்படிக்கத்தெரிந்த பெண்களில் பார்ப்பனஇனத்தில் 100க்கு 28ம், நம்மினத்தில் 100க்கு2க்குக் குறைவாகவும்விகிதம் இருக்கிறது.

ஆங்கிலம் எழுதப்படிக்கத்தெரிந்தவர்களின் விகிதம் இன்னும் கேவலமானது. ஆங்கிலம்எழுதப்படிக்கத்தெரிந்தவர்கள் பார்ப்பனரில் 100க்கு 33 பேர். அதாவது 3ல் ஒருவருக்கு ஆங்கிலம் எழுதப்படிக்கத்தெரியும். திராவிடஇனத்திலோ 100க்கு ஒருவர்தான். ஆங்கிலம் எழுதப்படிக்கத்தெரிகிற பார்ப்பனரல்லாத பெண்களின் கட்டத்தில் 100க்கு இவ்வளவு என்று விவரம் கொடுக்கப்படவில்லை. அதற்குப் புள்ளி விபரம் இல்லாத குறையால் அல்ல, இருக்கிறது, ஆனுல்அதை100க்கு, அல்லது1,000க்கு என்றுகூறமுடியாது. 10000க்குவேண்டுமானுல் கணக்கிட்டுக்கூறலாம். ஆங்கிலம் எழுதப்படிக்கத்தெரிகிற பார்ப்பனரல்லாதபெண்களின் விகிதம் 10,000ல் 9 பேர். எப்படியிருக்கிறது உலகத்திலே வேறெங்கும் காணமுடியாத அளவிற்கு பெண்பாற் புலவர்களைத் தன்னகத்தே கொண்டு, கல்விமேடையில் பெருமிதத்துடன் வீற்றிருந்த நாட்டின் நிலை!

கல்வியறிவு ஒரு இனத்தின் முதுகெலும்புபோன்றது. மேற்காட்டியபுள்ளிவிபரங்கள் திராவிடத்தில் கல்வி எவ்வளவு பிற்போக்கில் இருக்கிறது என்பதையும், கல்வித்துறையில் ஒரு குறிப்பிட்ட இனம் மாத்திரம்உயர்ந்துவிளங்குவதையும் நன்கு குறிப்பிடுவன. கல்வித்துறைக்கெனச்செலவிடப்படும் பொருள் 100க்கு 97 பங்கு வரிசெலுத்துகிற பெருங்குடி மக்களுக்குப்பயன்படும்படி செய்யப்படவில்லை. ஒருஇனத்திற்குமாத்திரம் படிப்பு ஏன் வரவில்லை? என்பதையும், அந்த இனத்திடம் மாத்திரம்கல்வி ஏன் செல்லவில்லை என்பதையும், நாட்டின் முன்னேற்றத்தில்ஈடுபட்டுள்ள அனைவரும் கேட்கவேண்டும். சமுகத்தில்வசதியின்மையால் உழைப்பாளரினம் வாடவும், உழைக்காத ஓய்வுக்கூட்டம் ஊராரின் உரிமை இடங்களில் தனியாட்சி செலுத்தும்படியான நிலைமை ஏற்பட்டுவிட்டது. அரசியலாருக்கு நீதிப்பண்பு தெரிந்திருந்தால், கல்வி பரவாத இடங்களில், அது பரவாததன்காரணங்களைக் கண்டுபிடித்து எல்லோரும் கல்விகற்கும் நிலையை உண்டாக்கியிருக்கவேண்டும். வெள்ளைக்கார அரசியல் தந்திரத்தில்கொள்ளைக்கு இடமிருந்ததேயன்றி, நீதிக்கு இடமில்லை. வேதியனின் சூரண்டல் இயந்திரமோ அநீதியின்மீதுகட்டப்பட்டது. எனவேதான் நம்முடையகல்வி விஷயத்தில் அரசியலார் அக்கரைகாட்டவில்லை, அரசியல் ஆட்டத்தில் ஈடுபட்டுள்ள கூட்டத்தினர் அலட்சியம் செய்தனர். வறியோரிடம் கல்வியின் வாடை செல்லாதவாறு, சமுக வெறியர்களும், அரசியல் ஆணவக்காரர்களும் அதனைத் திரையிட்டுவைத்துள்ளனர். ஆனுல்புயல் வீசும்பொழுது பஞ்சாய்ப் பறந்துவிடும்.

---

## சந்தாதார்களுக்கு

★

"திராவிட நாடு" சந்தாதார்கள் சந்தாப் பாக்கி அனுப்பும்போதும், கடிதங்கள் எழுதும்போதும் தங்கள் சந்தா நெம்பரைக் கண்டிப்பாய்க் குறிப்பிட்டு எழுதும்படி கேட்டுக்கொள்கிறோம்.

# ★ மயானகாண்டம் ★

"சுடுகாட்டிலே, ஒரு பிணத்தைக்கொளுத்தினவன் நீதானே?"

"ஆமாம்."

"யாருடையபிணம் அது?"

"என்மகன்".

"சரி, நீஎன்னஜாதி"?

"ஆதித்திராவிடன்'?

"ஆதித்திராவிடர்கள், தங்கள் ஜாதிக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள இடத்திலே தான், பிணங்களைக் கொளுத்தவேண்டும், நீயோவேறு ஜாதிக்காரர்களுக்கு என்று ஒதுக்கப்பட்டுள்ள இடத்திலே, உன் மகன்பிணத்தைக் கொளுத்தினுய். இந்தக் குற்றத்துக்காக, உன்னை ஏன் தண்டிக்கக்கூடாது?"

"எந்தக்குற்றம்?"

"ஒரு ஆதித்திராவிடனின் பிணத்தை, ஜாதிஇந்துப்பிணம்கொளுத்துவதற்கு என்று நிர்ணயித்துள்ள இடத்திலே கொண்டுபோய்க் கொளுத்துவது குற்றம். ஏன் அவ்விதம் செய்தாய்?"

"தெரியாது செய்துவிட்டேன்"

"தெரியாமல் செய்தேன் என்றால் போதுமா? நீ, அவ்விதம்வரை முறைதவறி நடந்ததால், ஜாதிமத ஆச்சாரம் கொண்ட மக்களின் மனம் புண்படும்படியான காரியத்தைச் செய்த குற்றம் உன் மீது ஏற்படுகிறது. ஆகவே, உன்னைத் தண்டித்தாக வேண்டும்."

"அன்று மழைபெய்தது. ஆகவே நான், அவசரத்திலே அறியாது செய்து விட்டேன்"

"தக்க சமாதானமல்ல. சரி, நாலுமாதம் கடுங்காவல் தண்டனை உனக்குத் தந்திருக்கிறோம்"

அரிச்சந்திரன் காலத்து மயான காண்டமல்ல, 1946-ம் வருஷத்தது; மதுரையில் ஒரு ஆதித்திராவிடனுடைய மூத்தகுழந்தை இறந்து போயிற்று. அதனை அடக்கம்செய்யச் சுடுகாடு சென்றான். குழந்தை இறந்த துக்கத்திலே இருந்தவனுக்கு "இந்தப்புண்ய பூமியில், ஆதிகாலத்திலே இருந்து நமது பெரியவா செய்துவைத்த சாஸ்திரோக்தமான ஏற்பாடும், வெள்ளைக்கார சர்க்கார் அந்தவேதகால ஏற்பாட்டை மதிச்சி நடக்கிறவா" என்னும் விஷயமும், எப்படிக்கவனித்து வந்திருக்க முடியும். அவன் பாபம், எதை எதைஎண்ணி அழுது கொண்டிருந்தானே? மழைவேறு தொல்லை கொடுத்தது. எங்கோஓர் இடத்தில் பிணம் கொளுத்தப்பட்டது. அந்த இடம், ஜாதி இந்துக்கள் மட்டுமே உபயோகிக்கக்கூடியதாம், அப்படி ஒரு ஏற்பாடு. அதனைமீறிச் செய்ததால், அங்கே ஒன்றும் அன்றுபூமிவெடிக்கவில்லை, சாமி கோபிக்கவில்லை, ஜனங்களும் சண்டைக்கு வரவில்லை, சட்டம் கோபித்துக்கொண்டது.

மக்களின் மதாச்சாரத்துக்கு விரோதமாக நடந்துகொண்ட குற்றத்துக்காக, அந்த ஆதித்திராவிடத் தோழன், தண்டிக்கப் பட்டான். நாலுமாதக்கடுங்காவல் தண்டனை. சட்டத்துக்கும், அந்தச் சஞ்சலத்தால் தாக்கப்பட்டவனுக்கும் நடைபெற்ற பேச்சு, நாம் மேலே குறித்திருப்பது.

வழக்கு, மேல் கோர்ட் விசாரணைக்குப் போயிற்று; கீழ்க்கோர்ட் தீர்ப்பு நிலைத்தது. இங்கே, சட்ட சம்பந்தமாகவும் வாதம் நடத்தப்பட்டதாம். 1938-ல், சென்னைசர்க்கார் ஒருசட்டம் ஏற்படுத்தினர், அதாவது, மதஸ்தாபனமல்லாத மற்றப் பொது இடங்களிலேஎந்த ஜாதியாரும் போகலாம்என்று. அதனைக்கூட எடுத்துக் காட்டினாராம். ஆனால், சட்டம், சம்பிரதாயத்துக்கு, சாஸ்திரத்துக்குத் தான் துணைநின்று அவனுக்குநாலுமாதக் கடுங்காவல் என்ற தீர்ப்புத்தான் கிடைத்தது.

சுடுகாடுதானே, அங்கேதாராளமாகப் போகலாம், சுந்தரேஸ்வரர் சமேதமீனாட்சிஆலயத்துள்ளேயே போக அனுமதி பெற்றுள்ள நாம், சுடுகாட்டிலே எங்கே சென்று பிணத்தைக் கொளுத்தினால் என்ன என்று, அந்தத் தோழன் எண்ணியிருக்கக்கூடும். அவனுக்கு நாலு மாதம்! அவன் சாட்சாத் நந்தன் பரம்பரை, நந்தனே வேதியனுக்கும் சிவஞான போதம் செய்தவன், என்று புராணிகர் கூறுவர்! பயன் என்ன? மதவாதிகளின் மனம் புண்ணாகும் என்று சட்டம் சொல்கிறது!!

மாகாண சட்டசபைக்குத் தலைவர்யார்? தோழர் சிவசண்முகம்! ஒருஆதித்திராவிடர். மதராசில்அவர் சட்டசபைத்தலைவர், மதுரையில் அவருடைய ஜாதி ஆசாமிக்குநாலு மாதம் தண்டனை, உயர்ஜாதிஇந்துவின்பிணம் கொளுத்தப்படவேண்டியஇடத்திலே, ஆதித்திராவிடப் பிணத்தைக் கொளுத்திய குற்றத்துக்காக.

மந்திரி கூர்மையா, ஆதித்திராவிடர். சட்டமந்திரியாக இருக்கும் வைஷ்ணவப் பிராமணர் தோழர் பாஷ்யம் அவர்களிடம் பார்லிமெண்டரி காரியதரிசியாக அமர்ந்துள்ள, தோழர் பரமேஸ்வரன், ஆதித்திராவிட இளைஞர். ஆயினும் என்ன? சட்டம், ஜாதி ஆச்சாரத்துக்கு மாறாக நடந்ததற்காக, மதுரையில் ஒரு ஆதித்திராவிடத்தோழனுக்கு நாலுமாதம் கடுங்காவல் தண்டனை தந்து இருக்கிறது.

அரசியலிலே தனித்தொகுதி கூடாது, சுடுகாட்டிலேதனித்தொகுதி வேண்டும்—இது எந்த வகையான நியாயம்?

ஆதித்திராவிடர், சட்டசபைச் சபாநாயகராகலாம், மந்திரியாகலாம், ஆனால், பிணத்தைக்கொளுத்தும் இடத்திலேகூட ஆதித்திராவிடருக்குப் பேதம் காட்டப்பட்டுத்தான்வரும்! இது எந்தவகையானநீதி?

நாட்டிலே காட்டப்படும்பேதம் போதாதென்று, சுடுகாட்டிலேயும் ஜாதிபேதம் காட்டப்பட்டு வருகிறது. இன்னின்ன ஜாதியாரின் பிணங்கள் இன்னின்ன இடத்திலே தான் புதைக்கப்படவோ, கொளுத்தப்படவோ வேண்டுமென்ற ஏற்பாடுகளும், அதற்கான அறிவிப்புக்குறிகளும், சென்னைச் சுடுகாட்டிலே இருக்கிறது.

ஜாதிபேதக்கொடுமையைக் களையவேண்டியது அவசியம் என்ற கொள்கையை எல்லாக்கட்சிகளும் ஒப்புக்கொண்டுள்ளன. காங்கிரஸ் கட்சி, பழங்குடிமக்களுக்குப் புதிய பெயர் கொடுத்ததோடு, அவர்கள் அரசியலிலே தனித்தொகுதி கேட்கக்கூடாது என்றும் உபதேசம் செய்கிறது. காங்கிரஸ் கட்சியினர் ஆட்சி செய்கின்றனர். சட்டசபைக்குத்தலைவரோஒருபழங்குடித் தோழர்.

நாடகத்திலேகூட நண்பர்கள் பாடுவார்கள், இறந்தபிறகு, பெட்டிச்சாவி எங்கே, கெட்டிக்காப்பு எங்கே, வட்டிசட்டிஎங்கே, என்று. அதுபோல் சகலமும் போனாலும், ஜாதிமட்டும், சுடுகாட்டுக்கும்வந்து நின்றுகொண்டு, "எதுபோனாலும் நான்இருக்கிறேன்!" என்று கேலி பேசி, பணியவும் வைக்கிறது. இந்தப் பேதத்தைப் போக்கும்படி, சென்னைக்காங்கிரஸ் மந்திரிசபையினரைக் கேட்டுக்கொண்டனர். மந்திரிசபையினர், அனுபவித்த தண்டனைக் காலம்போக எஞ்சியுள்ள தண்டனைக்காலத்தை ரத்துசெய்து, எதிரிகளை விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டதாக அறிகிறோம். ஆனால், இந்தஉத்தரவு, இந்தஒரு நிகழ்ச்சிக்கு மட்டுமா? அல்லதுபழங்குடி மக்கள் அனைவரும் இனிச்சுடுகாட்டில் எந்தஇடத்தில் வேண்டுமானாலும் தங்கள்பிணத்தைக்கொளுத்த இடமளிக்கிறதா? என்பதன் விளக்கம் அந்தஉத்தரவில் தெளிவுபடுத்தப்படவில்லை.

---

## தெய்வவிடுதி

1-ம் பக்கத் தொடர்ச்சி

சிருஷ்டி. கடவுளும் அதைஎழுதி வேதம்என்று கொடுத்திருக்கிறார் என்றுதானே சொல்லுகிறார்கள். சர்க்கஸ்காரன் தன்சாட்டையால் இயற்கையை மாற்றுவதுபோல் இராசாங்கத்தின் சட்டத்தால்மனிதனை மாற்றவேண்டும். அறிவால் மனிதர்கள்குணம் மாறுவது அபூர்வம். பயத்தால்தான்மாறுகிறது அறிவிற்கு ஆதாரம் கல்விஎன்கிறோம். நமதுசமயத்திற்கும்கல்விக்கும்உயர்ந்தசாதிஎன்கிறதன்மைக்கும்இதைவிட என்னபெருமை வேண்டும்? இந்தமனமாற்றம் பயத்திலிருந்து உண்டானதுதானே? நமதுசமயம், ஆச்சாரி, குரு, புரோகிதன், அரசன், தெய்வம் முதலியவையெல்லாம் தீண்டாமையைவிருத்திசெய்ததேயல்லாமல் போக்குவதில் என்னசெய்தது? மனமாற்றத்தை உண்டுபண்ண வேண்டுமென்கிறார்களே, அவர்கள்யார்? சனாதன தர்மத்தைக் காப்பாற்ற வேண்டுமென்றுசொல்லுகிறவர்கள்தானே. சனாதன தர்மம்என்றால் பூர்வீக வழக்கங்கள் என்றுஅர்த்தம். தீண்டாமையும் போகவேண்டும், சனாதன தர்மமும் தழைக்கவேண்டும் என எதையும்எப்படியும்பேசலாம். உண்மையும் நீதியும் இருக்கவேண்டும். ஒருசமயம் லார்ட்கர்சன் கோகலேயைப்பார்த்து "உங்கள் பேச்செல்லாம் சோடா கியாஸ்" என்றார். தீண்டாமையைப் பற்றிய நம்பேச்செல்லாம் சோடாகியாஸ் மாதிரி போகாதிருக்க வேண்டுமென்பதே எனதுகோரிக்கை. உண்மைக்கு உழையுங்கள், நீதியை நிலைநாட்டுங்கள். அதனால்வரும் எக்கஷ்டநஷ்டங்களையும்பொருட்படுத்தாதீர்கள். உலகப்பொதுவிதியைத் தள்ளாதீர்கள். நம்மவரை நாமே இகழ்ந்து அவர்கள்பெறும் நன்மை களைத்தடுக்காதீர்கள். பின்னால் பெரும் துன்பங்களுக்கு நாம் ஆளாகநேரிடும்.

●

# காந்தியாரின் :: :: கேர்பம்

★

"வருக, வீரர்காள்! வாழ்க, தோழர்காள்! ஆண்மையாளர்களே! உங்கள் அஞ்சா நெஞ்சம் கண்டு, அன்னை பாரததேவி பூரிக்கிறாள், பெருமையுடன் உம்மை அழைக்கிறாள். ஆங்கில ஏகாதிபத்யம், ஆகஸ்டுவீரர்களாம், உங்களை, எம்மிடமிருந்து பிரித்துவிட, என்னென்னமோ செய்தது, பலிக்கவில்லை. தூக்கிலிடத்துணிந்தனர்உங்களை; நாடு கொதித்தது, அந்த உத்தரவு மாற்றப்பட்டு, ஆயுட் தண்டனையாக்கப்பட்டது. நமது சர்க்கார் வந்தனர், நமது வீரர்களை நம்மிடம் அனுப்பிவைத்தனர். நாடு வரவேற்கிறது."

என்று தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவர் காமராஜர் உட்பட, அனைவரும், வாழ்த்தி வரவேற்றனர், 1942 ஆகஸ்ட்டு இயக்கத்திலேசம்பந்தப்பட்டு, கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு, மரணதண்டனைவிதிக்கப்பட்டு, பிறகு அது ஆயுட்தண்டனையாக்கப்பட்டு, பிறகு காங்கிரஸ் மந்திரிகள் காலம் பிறந்ததும், விடுதலை செய்யப்பட்டு, வெளிவந்த குலசேகரபட்டினம்தோழர்கள் காசிராஜன், ராஜகோபாலன், எனும்இருவாலிப வீரர்களையும்.

'நாட்டு விடுதலையிலே நாட்டம் கொண்டு, ஆவேசத்துடன் பணிபுரிந்தபோது, அந்த வாலிபர்கள், சட்டம், என்ற ஓர் திட்டம் இருப்பதுபற்றிக் கவலை கொள்ளவில்லை, ஒரே எழுச்சிமயம், 1942ல்; வெள்ளையனை விரட்டும் நாள், என்று கூறப்பட்ட சமயம். வெள்ளையனே ஓடப்போகின்றான் என்றால் அவன் போட்டுவைத்த சட்டம் என்ன செய்யும் நம்மை என்று எண்ணற்ற இளைஞர்கள்எண்ணிய நாட்கள். கொலை, கொள்ளை, கொளுத்துதல் கவிழ்த்தல், என்பவைகள், சட்டப்படி குற்றமாக இருக்கலாம், ஆனால் அவை யாவும் அந்தச்சமயத்திலே, பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தைத் தாக்கும் தேசியத் திருக்காரியம் என்றே, அவைகளில் சம்பந்தப்பட்டோர் எண்ணினர். குலசேகரபட்டினம் தோழர்கள் அத்தகைய "ஆகஸ்ட்டு வீரர்கள்." அவர்களைத்தமிழ்நாடு வாழ்த்தி வரவேற்றது. அவர்கள் கொலை செய்தவர்கள் என்று கூறலாகாது, தேசப்பணிபுரிந்தவர்கள் என்று காங்கிரஸ் தலைவர்கள் கூறினர். அவர்களின்விடுதலை,விழாவாகக்கொண்டாடப்பட்டது. வீரர்களே! வருக என்று பல இடங்களிலே, அவர்களை வரவேற்றனர்.— வரவேற்கின்றனர் — இனியும் வர[illegible] வேற்கத்தான் செய்வர்.

இந்தச் சமயத்திலே, [illegible] கிழமை அரிஜனில், கா[illegible] "தேசிய சேவையிலே ஈடுபட[illegible] காரணத்தாலேயே, கொலையும்

(3-ம் பக்கம் பார்க்க)


## தாது புஷ்டிக்கு

மஹா வீரிய லேகியம், அயக்காந்தங்க செந்தூரம்

30 வேளை: ரூபா 10—0—0

இணையற்ற மருந்துகள் என்றநற்சாட்சிகள்குவிகின்றன. உடலில் ஏற்படும் எல்லாவிதமான சோர்வுகளையும்நீக்கி நரம்புகளைமுறுக்கேற்றிவிடும். சரீரம் பௌவண தேசசுடன் பிரகாசிக்கும்.

சரஸ்வதி வைத்திய சாலை,

பழனி. (S. I.)

# படிப்பு வராத இனம்

காலடிச்சத்தம் கேட்டதும் வேலைக்கார முனியம்மா திரும்பிப் பார்த்தாள். அவள் எதிர்பார்த்த படி பியூன் ஏழுமலைவரவில்லை. அவளுடைய மகன் சின்னசாமிதான் சாவிக் கொத்தை அவளிடம் கொடுத்தான். "ஏண்டா! பியூன் ஐயா எங்கே" என்றாள் முனியம்மா. "அவரு ஐயருவீட்டுக்குப் போரு ராம். உன்னைக்கூட்டச்சொன்னரு. சீக்கிரம் வந்துடருரு"

"சரி, நீபோய் காளைமாட்டைக் குளிப்பாட்டிக்கட்டு" என்று உத்தரவிட்டபிறகு முனியம்மா, வகுப்பு அறைகளைச்சுத்தம் செய்யச்சென்றாள். சின்னசாமியும் அழுக்குப் படிந்த கந்தல்துண்டை மடித்துக் கட்டிக்கொண்டு விட்டுக்கு ஓடினன்.

சீக்கிரம் வந்துவிடுவதாகக் கூறி விட்டுத்தான் ஏழுமலை தலைமையாசிரியர் கிருஷ்ணசாமிஐயர் அகத்துக்குச்சென்றான். அவருடைய வேட்டியைத்துவைத்துப்போட்டுவிட்டு, பள்ளிக்கூடம்போக அவன் அனுமதிகேட்டான். அப்பொழுதுதான் ஐயர் தன் அருமந்த மகன் வெங்கிட்டுவுக்குப் புதிய எட்டாம்பாட புத்தகத்தைக்கொடுத்துக்கொண்டிருந்தார். வெங்கிட்டுவும் மகிழ்ச்சியுடன் புத்தகத்தை வாங்கினன். "எப்பா! புத்தகத்திலே படமிருக்கா" என்றன் வெங்கிட்டு.

"சீ! மண்டு எட்டாம்வகுப்புக்கு வந்துட்டே. இன்னமுமா படம் பார்க்கிறது. சமத்தோல்லியோ, போய்ப்பாடம் படித்துக்கொண்டிரு. நான்போய் ஸ்நானம் செய்துண்டுவர்ரேன்' என்று கிருஷ்ணசாமிஐயர் வெங்கிட்டுவைத்தட்டிக் கொடுத்தார். வெங்கிட்டுவைச்சமர்த்து என்று ஐயர்மட்டுமல்ல, அதே நேரத்தில் பள்ளிக்கூட ரைட்டர் ரெத்தினசாமியும் தன்மகன் சிங்காரவேலுவிடம் சொல்லிக்கொண்டிருந்தான் "தடியாமூஞ்சி! கழுதைக்குமாதிரி வயசாகிறது. இன்னும் ஐந்தாவது வகுப்பில் அடிமண்டுவாகயிருக்கிறயே. உன்படிப்புக்கு அழுகிறபணத்தைப்பண்டாரம் அனுப்பித்தாலாவது உன்னைப் பெற்ற பாவம்தீரும். படிக்கிறப் போலப்பாசாங்கு! உன்னைவிடவயதில் குறைந்தவன் வெங்கிட்டுவைப் பார். எட்டாவது வகுப்புக்குவந்துவிட்டான்." இந்தவசைவுகளை ஏற்றுக்கொண்டு சிங்காரம் படிக்க உட்கார்ந்தான். அதற்குள் பால்காரன் வந்தான். "டேய், படித்தது போதும் அவனேடுபோய், காப்பிக்கிளப்பிலே பால் கறந்து கொடுத்துவிட்டுவா" என்று மறுபடியும் ரெத்தினசாமியின் ருத்ரகானம் சிங்காரத்தின்மீது பாய்ந்தது.

பள்ளிக்கூடம் கட்டியதிலிருந்து அங்கு குப்பைகூட்டும்வேலை முனியம்மாவிடம்தான் இருக்கிறது. அவளும் நாள் தவருது காலையில் பள்ளிக்கூடத்திற்கு வருவாள். பள்ளிக்கூடத்திற்குத் தன் மகன் சின்னசாமி வயதினரான சிறுவர்கள் வந்துபோவதைப் பார்த்திருக்கிறள். அவளுக்குத் தன் மகனும் பள்ளிக்கூடப செல்லவேண்டும் என்ற எண்ணமே எழுந்ததில்லை. பலப்பல கட்டிடங்களைப்போல பள்ளிக்கூடமும் ஒரு கட்டிடப். அங்கு தனக்குக் கூட்டுப் வேலை. அவ்வளவுதான் அவளுக்குத்தெரிந்தது.

ஆனால் ஏழுமலை அந்தப்பள்ளிக்கூடத்திலேயே படித்தவன். படித்தவன் என்றல் பெரிதாக நினைத்துவிடாதீர்கள். மூன்றும் வகுப்பை அவன் எட்டிப்பார்த்தான். அப்பொழுதுதான் அவனுடையதந்தை இறந்தார். நாலைந்து ஆண்டுகள் வேறிடங்களில் 'பையனக' வேலை பார்த்துவிட்டுக்கடைசியில்பள்ளிக்கூடப்பியூனக வந்தான். ஆசிரியர்கள் அவனை அதட்டும்பொழுது, "நாமும் படித்திருந்தால், இந்தத் தொல்லை வந்திருக்காது" என்று ஏழுமலை சிலசமயங்களில் எண்ணுவதுண்டு. 'எல்லாம் பிராப்தம்' அவன் என்ன செய்வான்?

ரெத்தினசாமிக்குத்தன்மகன்சிங்காரத்தைப் படிக்கவைக்க வேண்டுமென்ற ஆவல் அதிகமுண்டு. படிப்பில் கெட்டிக்காரப் பையன்களையும், குறிப்பாகப் பார்ப்பனமாணவர்களையும் பார்க்கும்பொழுதெல்லாம் சிங்காரவேலுவின் படிப்பின்மை ரெத்தினசாமியை கவலைக்குள்ளாக்கும். ரெத்தினசாமியால் என்ன செய்யமுடியும். சிங்காரம் படிப்புவராத சமுகத்தில் பிறந்துவிட்டான் என்ற ஒரே காரணந்தான் ரெத்தினசாமியால் கண்டுபிடிக்கமுடிந்தது.

படிப்புவராத இனம்! இந்தச் சொற்றொடரைப்போல வேறெதுவும் பள்ளிமாணவனின் இளம்உள்ளத்தைத்துளைத்திருக்காது, பட்டதாரிகளைப் பதுங்கச் செய்திருக்காது, இன விடுதலை கோருபவர்களின் இதயத்திலே இடையருது ஒலித்துக் கொண்டிருக்கும் இழிமொழி அது. பழிப்பிற்கிடமான இந்தப் பழமொழியைக் கேட்கும் பொழுதெல்லாம் நம்முள்ளத்திலே கோபமும் வேதனையும் புகைந்ததேயன்றி, அந்தச்சொற்களில் உள்ள உண்மையின் அளவை ஆராய நாம் முற்படவில்லை.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் சிதறிக்கிடக்கும் பள்ளிக்கூடங்களில் பெரும்பாலானவை சர்க்காராலும், சர்க்காரின் உதவியாலும் நடைபெறுபவை. அரசியலாரால் நடத்தப்படுகிறதுஎன்றவுடன் கல்விக்குச்செலவிடப்படும் பணம் மக்களிடமிருந்து வசூலிக்கப்படும் வரிப்பணத்திலிருந்து செலவு செய்யப்படுவது என்றுகூறத் தேவையில்லை. கல்விக்காகச் செலவிடப்பட்டபொருள்தான் பல்கலைக்கழகங்களாகவும், கல்லூரிகளாகவும், ஆய்வுக்கூடங்களாகவும், ஆராய்ச்சி மன்றங்களாகவும், நூல்நிலையங்களாகவும், விளையாட்டு மைதானங்களாகவும், உயர்நிலை, நடுநிலை, முதல்நிலைப்பள்ளிகளாகவும் சிறப்புற விளங்குகிறது. ஆனல் வரிப்பணத்தின் பெரும் பகுதியைச் செலுத்துகிற ஏழை மக்களுக்குக் கல்வியின் வாடைகூட அடிக்கவில்லை. மக்கள்தொகையில் நூற்றுக்கு மூன்றாக உள்ள முப்புரிக் கூட்டத்தினரிடம்தான் கல்விமங்கை உறவாடுகிறள். தன்னை வளர்த்துவிட்ட தாய்ச்சமூகத்தை ஏறெடுத்தும் பார்த்ததில்லை. பிறப்பின் காரணமாகச் சமுகத்தில் உயர்ந்த இடத்தைக் கற்பித்துக் கொண்டு, ஊராரின் உழைப்பிலே திளைக்கும் கூட்டமாக ஆரியஇனம் இருக்கிறது என்பதை நாம் கூறும் பொழுதெல்லாம் நம்மீது ஆரிய அன்பர்களின் ஏச்சும், அதற்குப் பக்கபலமாக திராவிடத் தேசியத் தோழர்களின் பேச்சும், வீசப்படுவதை நாமறிவோம்.

அரசியலாரால் வசூலிக்கப்படும் வரிப்பணம் செலவு செய்யப்படும் விதமும், அவ்வாறுசெலவு செய்யப்படும்பொழுது தனக்குச் சரியானபங்கு— பலன் கிடைக்கிறதா என்று பார்ப்பதும் மக்களுக்கு எழுந்துள்ள அரசியல் உணர்ச்சியின் வேகத்தைக்குறிப்பிடுவன.

கடைசியாக வந்துள்ள சென்னை மாகாணக்கல்வி யதிகாரியின் 1943-44ம் ஆண்டு அறிக்கையிலிருந்து பார்த்தால் அந்த ஆண்டில் கல்விக்காகச்செலவு செய்யப்பட்டுள்ளதொகை 7, 22, 53, 225

4-ம் காலம் பார்க்க

ரூபா ஆகும். இவ்வாறுசெலவுசெய்யப்பட்டுள்ளஏழுகோடி இருபத்திமூன்றுலட்ச ரூபாய்களால் நாட்டுக்கு ஏற்பட்டுள்ள பலனை ஆராய்வோம்.

சென்னைமாகாணத்திலுள்ள எலிமெண்டரி, நடுநிலை, உயர்தரப்பள்ளிக்கூடங்களின்தொகை 37, 090. இவைகளில் கல்விபெறும் மாணவர்களின்தொகை 26,73,680. முதல் வகுப்பிலிருந்து ஆருவது பாரம் வரை ஒவ்வொரு வகுப்பிலுள்ள பிராமண, பிராமணரல்லாதாரின் தொகை கீழ்வரும்கட்டத்தில்காட்டப்பட்டிருக்கிறது.

| | பார்ப்பன மாணவர்கள். | பார்ப்பனரல்லாத மாணவர்கள். |
|---|---|---|
| 1-வது வகுப்பு | 47,322 | 7,43,312 |
| 2-வது ,, | 36,581 | 4,73,575 |
| 3-வது ,, | 33,074 | 3,71,487 |
| 4-வது ,, | 31,878 | 3,10,799 |
| 5-வது ,, | 31,717 | 2,81,357 |
| 1-வது பாரம் | 20,014 | 74.273 |
| 2-வது ,, | 17,960 | 55,699 |
| 3-வது ,, | 16,801 | 45.376 |
| 4-வது ,, | 12,159 | 20,565 |
| 5-வது ,, | 10,163 | 15,748 |
| 6-வது ,, | 9,433 | 13,387 |
| | 2,67,102 | 24,05,578 |

இந்த எண்ணிக்கைப் பகுதிகளைப் பார்த்ததும் சாதாரணமாகப் பார்ப்பன மாணவர்களின்தொகை நம்மாணவர்களின் தொகையை விட மிகக் குறைவாயிருக்கும் பொழுது, நாம் வருந்துவது ஏன் என்றுதான் தோன்றும். ஆனல் பார்ப்பனர்களின் தொகை நூற்றுக்கு மூன்று என்பதையும் மற்ற நூற்றுககு 97 ஆகஉள்ள திராவிடர்களின் தொகை பார்ப்பனர் தொகையைவிட 32-பங்கு அதிகம் என்பதையும் மனத்துள் வைத்துப் பார்த்தால் நம்மவர்களின் கல்வியின் பிற்போக்கு வெளிப்படும். எல்லோருக்கும் ஒத்த உரிமையும், வாய்ப்பும் இருந்தால் பார்ப்பன மாணவர்களைவிட நம்மாணவர்கள் 32-மடங்கு அதிகம் இருக்கவேண்டும். ஆனல் 1-வதுவகுப்பிலிருந்து 6-வது பாரம்வரையில் படிக்கும் மாணவர்களின் தொகையில் அவர்களைவிடத்திராவிடமாணவர்தொகை 9-மடங்குதான் அதிகமாகும். அதுகூட எண்ணிக்கைஅளவே யொழியப், படிப்பில் பலன் பெறுவோர் தொகையல்ல என்பதை மேலும் ஒருமுறை எண்ணிக்கைக் கட்டத்தைப் பார்த்தால் புலனுகும். முதல் வகுப்பில் பார்ப்பன மாணவர்கள் 47- ஆயிரம் தான். திராவிட மாணவர்கள் 7-லட்சத்து 43-ஆயிரம். உண்மையிலேயே மகிழ்ச்சி தரக்கூடிய எண்ணிக்கைதான். இந்த மகிழ்ச்சி 2-வது வகுப்பு அறையில் நுழைந்ததும் மங்கிவிடுகிறது.

2-வது வகுப்பில் பார்ப்பன மாணவர்கள் 36-ஆயிரம், திராவிட மாணவர்கள் 4-லட்சத்து 47-ஆயிரத்துக்கு குறைந்து விடுகின்றனர். பார்ப்பனர்களின் தொகையில் 11 ஆயிரம் குறைகிறது. திராவிட மாணவர்களில் 2-லட்சத்து 70 ஆயிரம் பெயர்களைக்காணேம். 3-வது வகுப்பில் நுழைந்ததும் கலக்கம் இன்னும் அதிகரிக்கிறது. வகுப்பு உயரஉயரத்திராவிட மாணவர்கள் தொகை நிமிர்த்த முடியாத அளவுக்கு வீழ்ந்து விடுகிறது. கடைசியாக 6-வது பாரத்தில் நுழையும் பொழுது, பார்ப்பன மாணவர்கள் தொகை 9-ஆயிரமாகவும் திராவிட மாணவர்களின் தொகை 13-ஆயிரமாகவும் காணப்படுகிறது. கணக்கு எப்படி இருக்கிறது பாருங்கள். நூற்றுக்கு மூன்று விகிதமுள்ள பார்ப்பனமாணவர்கள் பத்தாவது வகுப்பில் 9-ஆயிரம், நூற்றுக்கு 97 உள்ள திராவிட மாணவர்கள் தொகை 13-ஆயிரம். கல்விமுறையில் வசதியும், சமூக அமைப்பில் நீதியும் அரசியலதிகாரத்தில் நேர்மையும் இருக்குமானல் பத்தாவது வகுப்பில் பார்ப்பன மாணவர்கள் 9-ஆயிரம் என்று கூறும்பொழுது திராவிட மாணவர்கள் தொகை அதைவிட 32-மடங்கு அதாவது 2-லட்சத்து 88-ஆயிரம் என்றிருக்கவேண்டும். ஆனல் இருப்பதோ 13-ஆயிரம். நீதி இல்லை; சமுக பொருளாதார, அரசியல் துறைகளில் நீதியில்லாத காரணத்தால்.

முதல் வகுப்பில் பெருவாரியாக உள்ள திராவிட மாணவர் தொகை வேகமாகச்சரிந்துவிழ்ந்து பத்தாவதை அடையும் பொழுது பாழடைந்து இருக்கிறது. இந்தப் பகுதியை விளக்குவதற்கு கீழ்க்கண்ட எண்ணிக்கைகளைப் பார்க்கவும். இதைத் தயாரிப்பதில் முதல் வகுப்பு மாணவர்களை 1000என்று வைத்துக்கொண்டால் இப்பொழுதுள்ள விகிதாசாரப்படி இரண்டு இனமாணவர்களிலும் இரண்டாவது வகுப்பில் எவ்வளவு பேர்

4-ம் பக்கம் பார்க்க

தந்தி:- "புறாமார்க்" திருச்சி.




Edited Printed and Published by C. N. Annadurai, M.A., at "Dravida Nadu" Press, 317-319 Hodgsonpet, Conjeeveram.